**செ.வெ.எண்: 588** **நாள்: 12.10.2021**

**புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடியில்**
**கலைஞரின் வருமுன் காப்போம் திட்டம் சிறப்பு மருத்துவ முகாமினை மாண்புமிகு சுற்றுச்சூழல், காலநிலை மாற்றத்துறை மற்றும் இளைஞர்நலன், விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு.சிவ.வீ.மெய்யநாதன் அவர்கள் துவக்கி வைத்தார்.**

---

புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி புனித அற்புத மாதா நடுநிலைப்பள்ளியில் கலைஞரின் வருமுன் காப்போம் திட்டம் சிறப்பு மருத்துவ முகாமினை மாண்புமிகு சுற்றுச்சூழல், காலநிலை மாற்றத்துறை மற்றும் இளைஞர்நலன், விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு.சிவ.வீ.மெய்யநாதன் அவர்கள் இன்று (12.10.2021) துவக்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சி மாவட்ட வருவாய் அலுவலர் திரு.பெ.வே.சரவணன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

பின்னர் மாண்புமிகு சுற்றுச்சூழல், காலநிலை மாற்றத்துறை மற்றும் இளைஞர்நலன், விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் அவர்கள் பேசியதாவது;

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழகத்தில் உள்ள பொதுமக்களின் முன்னேற்றத்திற்காக பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். இதன் ஒருபகுதியாக இன்றையதினம் புதுக்கோட்டை மாவட்டத்தில் கலைஞரின் வருமுன் காப்போம் திட்டம் துவக்கி வைக்கப்பட்டுள்ளது. மாண்புமிகு முன்னாள் முதல்வர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் ஏற்கனவே கொண்டுவரப்பட்ட மகத்தான திட்டம் வருமுன் காப்போம் திட்டமாகும்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முதல்வராக பொறுப்பேற்ற நாள்முதல் தமிழகத்தை இந்தியாவின் முதன்மை மாநிலமாக உருவாக்கும் வகையில் அனைத்துத் துறைகளிலும் சிறப்பான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்கள். அதனடிப்படையில் நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்பதை உணர்ந்து நோய்களை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து குணப்படுத்தும் வகையில் கலைஞரின் வருமுன் காப்போம் திட்டத்தை செயல்படுத்தியுள்ளார்கள்.

இதன்படி பொதுமக்களின் இருப்பிடங்களுக்கே நேரடியாகச் சென்று மருத்துவ பரிசோதனை மேற்கொண்டு பொதுமக்களின் நோய் கண்டறியப்பட்டு சிகிச்சை அளிக்கப்படுகிறது. இதில் நோய் கண்டறியப்படுபவர்களுக்கு மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தின் கீழ் நேரடியாக வீடுகளுக்கு சென்று மருந்து, மாத்திரைகள் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மேற்கொண்ட தீவிர நடவடிக்கையின் காரணமாக தமிழகத்தில் கோவிட்-19 நோய்தொற்று குறுகிய காலத்தில் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. தற்பொழுது பண்டிகை காலம் தொடங்கவுள்ளதால் பொதுமக்கள் கோவிட் தடுப்பு வழிமுறைகளை தவறாது பின்பற்றி கோவிட் தொற்றிலிருந்து தங்களைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டும். பொதுமக்களுக்கு கோவிட் நிவாரண உதவித்தொகை ரூ.4,000 வழங்கப்பட்டுள்ளது. இதேபோன்று 14 வகையான மளிகைப்பொருட்களும் வழங்கப்பட்டுள்ளதுடன், நகரப் பேருந்துகளில் பெண்கள் கட்டணமின்றி பயணம் செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது.

மேலும் ஆலங்குடியில் அரசு கலைக்கல்லூரி அமைக்கப்படும் என மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்கள். இப்பகுதி மக்களின் அனைத்து கோரிக்கைகளும் நிறைவேற்ற உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். எனவே பொதுமக்கள் இம்மருத்துவ முகாமை உரிய முறையில் பயன்படுத்தி, மருத்துவ பரிசோதனை செய்து நோய்களை முன்கூட்டியே கண்டறிந்து சிகிச்சைப் பெற்று நோயற்ற நல்வாழ்வு வாழ வேண்டும் என மாண்புமிகு சுற்றுச்சூழல், காலநிலை மாற்றத்துறை மற்றும் இளைஞர்நலன், விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு.சிவ.வீ.மெய்யநாதன் அவர்கள் பேசினார்.

இந்நிகழ்ச்சியில் துணை இயக்குநர் (சுகாதாரப் பணிகள்) மரு.கலைவாணி, திருவரங்குளம் ஒன்றியக்குழுத் தலைவர் திருமதி.வள்ளியம்மை தங்கமணி மற்றும் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

---

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை.**